இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 306 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – ஆனி 02 – ஞாயிற்றுக்கிழமை 16 ஜூன் 2024 – சென்னை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 306 : Thiruvalluvar Year - 2055 - Aani 02- Sunday 16 June 2024 - Chennai 12 Pages ₹ 5.00



கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (15.6.2024) கோவையில், நடைபெற்ற முப்பெரும் விழாவில் சிறப்புரையாற்றினார். இவ்விழாவில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி, கழகப் பொருளாளர் டி.ஆர். பாலு, முதன்மைச் செயலாளர் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, இளைஞர் அணிச் செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கழக துணை பொதுச் செயலாளர்கள், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் செல்வப்பெருந்தகை, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் கட்சி தேசியத் தலைவர் பேராசிரியர் காதர் மொய்தீன், மக்க மக்கள் நீதி மய்யத்தின் துணைத் தலைவர் ஏ.ஜி. மவுரியா, மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழக செயலாளர் துரை வைகோ, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி பொதுச்செயலாளர் ஈஸ்வரன், தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், மனிதநேய ஜனநாயக கட்சி தலைவர் தமிமுன் அன்சாரி, ஆதிதமிழர் பேரவை நிறுவனத் தலைவர் அதியமான், கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், கோவை மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் கழகத்தின் பல்வேறு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற நினைத்தவர்களை சட்டப் புத்தகத்திற்கு முன் தலைகுனிந்து வணங்க வைத்திருப்பதுதான்

# ‘இந்தியா’ கூட்டணியின் 41-வது வெற்றி!

## கோவை முப்பெரும் விழாவில் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சி முழக்கம்!

**கோவை, ஜூன் 16–**

**“இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற நினைத்தவர்களைச் சட்டப்புத்தகத்திற்கு முன்னால் தலைகுனிந்து வணங்க வைத்திருப்பதுதான் ‘இந்தியா’ கூட்டணியின் 41-ஆவது வெற்றி” எனவும், “வர இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் 200க்கும் அதிகமான தொகுதிகளை நம்முடைய கூட்டணி கைப்பற்றியது என்ற இலக்கை நோக்கிய நம்முடைய பயணத்தை இன்றிலிருந்து தொடங்குவோம்” என்றும் கோவையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் எழுச்சியுரையாற்றிய கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**கோவை கொடிசியா மைதானத்தில் நேற்று (15.6.2024) நடைபெற்ற முப்பெரும் விழாவில் கழகத் தலைவரும் - தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :**

கோவைக்குக் கடந்த முறை வந்ததை நினைத்துப் பார்க்கிறேன்.

தேர்தல் பரப்புரைக்காக வந்தபோது எவ்வளவு சிறப்பாகக் கூட்டம் நடைபெற்றதோ அதைவிடச் சிறப்பான வெற்றியையும் கொடுத்து மிகப்பிரமாண்டமாக இந்த வெற்றி விழாவை ஏற்பாடு செய்திருக்கும் அமைச்சர்கள், செயல்வீரர் முத்துசாமி அவர்களுக்கும், தம்பி டி.ஆர்.பி. ராஜா அவர்களுக்கும், ஒன்றுபட்ட கோவை மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், நிர்வாகிகளு க்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துகள்!

கடந்த முறை இங்கே நான் கலந்து கொண்ட கூட்டம் இந்தியா முழுவதும் ‘டிரெண்ட்’ ஆனது.



### இதே கோவையில் எனக்கு ஸ்வீட் பாக்ஸ் தந்து மோடியின் பிம்பத்தை உடைத்த ராகுல்!

அதற்குக் காரணம், எட்டு முறை தமிழ்நாட்டிற்கு வந்து பிரதமர் கட்டமைத்த பிம்பத்தை, அருமைச் சகோதரர் ராகுல் காந்தி ஒரே ஒரு ஸ்வீட் பாக்ஸ் கொடுத்து ‘Close’ செய்துவிட்டார்! சகோதரர் ராகுலின் அந்த அன்பை என்னால் என்றைக்கும் மறக்க முடியாது! அன்றைக்கு அவர் வழங்கிய இனிப்பு நம்முடைய எதிர்க்கட்சியினரின் கணிப்புகளைப் பொய்யாக்கியது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் தேர்தல் முடிவுகளைப் பார்த்து நான் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை! நாற்பதும் நமதே என்று முழங்கினேன்! நடக்குமா? நடக்க விடுவார்களா? என்று பலரும் யோசித்தார்கள். ஆனால், நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தது. என் நம்பிக்கைக்கு அடித்தளம் யார்? கொள்கைக்காக இங்கே கூடியிருக்கும் நீங்கள்தான் என்னுடைய நம்பிக்கைக்கு அடித்தளம்! இந்த மேடையில் இருக்கின்ற தலைவர்கள்தான் அந்த நம்பிக்கைக்கு ஆதாரம்! எப்படிப்பட்ட தொண்டர்கள் இந்த இயக்கத்திற்குக் கிடைத்திருக்கிறார்கள்! “வெட்டி வா” என்று சொன்னால் “கட்டி வருகிறவர்கள் மட்டுமல்ல”, அதை வைத்துக் கோபுரம் எழுப்பக் கூடியவர்கள் என்று மீண்டும் நிரூபித்துவிட்டார்கள்!

### வர இருக்கும் சட்டமன்றத் தேர்தலில் 200-க்கும் அதிகமான தொகுதிகளை கைப்பற்றும் இலக்கை நோக்கி இன்றே பயணத்தைத் தொடருவோம்!

இரத்தத்தை வியர்வையாகச் சிந்தி, காலத்தை உங்களுடைய கடமைக்காக மட்டுமே ஒப்படைத்து, நாற்பதுக்கு நாற்பது மட்டும்தான் நம்முடைய இலக்கு என்று நாளும் உழைத்த, திராவிட முன்னேற்றக் கழகத்தின் உடன்பிறப்புகள் - இந்தியா கூட்டணிக் கட்சித் தோழர்கள் அத்தனை பேரும் இருக்கின்ற திசையை நோக்கி நான் வணங்குகிறேன்.

### ‘இந்தியா’ கூட்டணி தொண்டர்களுக்கு நடக்கும் பாராட்டு விழா இது!

இந்த வெற்றிவிழா தனிப்பட்ட ஸ்டாலினுக்கு நடைபெறும் பாராட்டு விழா அல்ல; இந்த மேடையில் இருக்கும் இந்தியா கூட்டணித் தலைவர்கள் அனைவருக்கும் நடைபெறும் பாராட்டு விழா இது! இந்தியா கூட்டணி தொண்டர்கள் அனைவருக்கும் நடைபெறும் பாராட்டு விழா இது! எனவே, இங்கே பேசிய தலைவர்கள் என்னை நோக்கி வழங்கிய பாராட்டுச் சொற்களை மாலைகளாகக் கோத்து, தொண்டர்களான - தோழர்களான - உடன்பிறப்புகளான உங்களுக்கு, உங்களில் ஒருவனான இந்த ஸ்டாலின் காணிக்கை ஆக்குகிறேன்!

இது சாதாரண வெற்றி இல்லை, வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றி!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்